மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு அதனை எடுத்துச் சென்று அம்மா மருந்தகம் ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துதல்

***11211—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதிக்குட்பட்ட அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரமுயர்த்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "தரமுயர்த்தும்*

2018 ஜூன் 25]

கருத்துரு பரிசீலனையில் இல்லை" என்ற தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். நான் சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பாக பத்திரிகையிலே செய்தி ஒன்று படித்தேன். "எது ஒன்று முடியாது என்று நினைக்கின்றார்களோ, உலகத்தில் அதை வேறு ஒருவர் செய்துகொண்டிருப்பார்" என்று அதிலே சொல்லியிருந்தார்கள். அதுபோல முடியாத காரியம் என்று ஒன்றுமில்லை. அகரம்தென் பஞ்சாயத்து என்பது, சென்னை, தாம்பரம் நகராட்சியை ஒட்டியிருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே multi–speciality hospital, *பொறியியல் கல்லூரி, கலைக் கல்லூரி போன்றவை செயல்படுகின்றன.*

முற்பகல் 10–10

அதுமட்டுமல்ல, ஊராட்சி என்றுதான் பெயர். 20,000 மக்கள் அங்கே இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல; அந்தப் பகுதியிலே அரசுக்குச் சொந்தமாக பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் இன்றைக்குப் பராமரிக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், இல்லை. அங்கு அதிகாரிகள் இல்லை; ஒரே ஒரு clerk–*தான் இருக்கிறார். அந்த* clerk–*ஐ வைத்துக்கொண்டு 20,000 வாக்காளர்கள் இருக்கின்ற அந்தப் பகுதியைப் பராமரிக்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி முடியாத ஒரு நிலை ஏற்பட்டால், பக்கத்தில் இருக்கின்ற திருவஞ்சேரி, மதுரப்பாக்கம் ஆகிய இரண்டையும் இதோடு சேர்த்து, இந்த 3 பஞ்சாயத்துகளை ஒருங்கிணைத்து, பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதுபோல, முடிச்சூர் பகுதி; அதுவும் இன்றைக்கு ஊராட்சி என்று சொன்னாலும், 20,000 மக்கள்தொகை கொண்ட பகுதியாக இருக்கிறது. அதை உடனடியாக நீங்கள் பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். அங்கேயும் அந்தப் பிரச்சினை இருக்கின்றது. அரசு அதிகாரிகளை இதுகுறித்து கேள்வி கேட்டால், தரமுயர்த்த முடியாது என்று பதில் சொல்லிவிடுவார்கள். ஆனால், பக்கத்தில் இருக்கின்ற பெருங்களத்தூர் பேரூராட்சியில் நிதிநிலை அதிகமாக இருக்கின்றது. அதைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. அப்படி முடியவில்லையென்று சொன்னால், முடிச்சூர் ஊராட்சியைப் பெருங்களத்தூர் பேரூராட்சியோடு இணைத்துவிட்டால் உண்மையிலேயே அந்தப் பகுதி வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இன்னொரு கேள்வி உங்களுக்கு இருக்கிறது. நிறைய உறுப்பினர்கள் இன்று உள்ளாட்சித் துறை தொடர்பான துணை வினாவிற்கு வாய்ப்பு கேட்டிருக்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் சுருக்கமாக முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். நீங்கள் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று சொன்னீர்கள். நான் ஆலோசனை சொல்லிவிட்டேன். நான் சொன்ன ஆலோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920–ன் பிரிவு 3(P)–ல் ஒரு ஊராட்சியின் வருமானம், விவசாயம் சாராத தொழில்களின் வேலைவாய்ப்பு சதவீதம், பொருளாதார முக்கியத்துவம் மற்றும் 30 ஆயிரத்திற்கும் மிகாத மக்கள்தொகை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த நெறிமுறைகளைப் பின்பற்றி ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்து அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட வேண்டும். அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஆகிய ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரமுயர்த்துவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துருக்களை எல்லாம், அங்கிருக்கக்கூடிய ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மக்கள் எல்லாம், அந்த மன்றத்திலே தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எங்கள் துறைக்கு அனுப்பி வைத்தால், அதைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வளர்ந்து வருகின்ற பகுதியாக, சென்னையை ஒட்டியிருக்கின்ற பகுதியாக தாம்பரம் தொகுதி இருக்கின்றது. 15 வார்டுகள் உள்ள செம்பாக்கம் பகுதி இன்றைக்கு நகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், செம்பாக்கத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற சிட்லபாக்கம் பேரூராட்சி 18 வார்டுகள் கொண்டதாகவும், செம்பாக்கத்தைவிட மக்கள்தொகை அதிகம் கொண்டதாகவும் விளங்குகிறது. வளர்ந்து வருகின்ற சிட்லபாக்கம் பேரூராட்சியில் garbage எடுப்பது என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. பாதாள சாக்கடைத் திட்டம் தேவையென்று அங்குள்ள மக்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அங்கே குடிதண்ணீர் பிரச்சினையும் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. அவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு வருத்தமெல்லாம் அங்கே இருக்கின்ற ஏரிகளைப் பராமரிக்க வேண்டும். மற்ற ஊர் மாதிரி இது கிடையாது. தாம்பரம் மற்றும் சென்னையை ஒட்டியிருக்கின்ற பகுதிகளிலிருந்து சமூக ஆர்வலர்கள் இந்த ஏரிகளைப் பராமரிக்க வேண்டும், நல்ல குடிதண்ணீர் வேண்டுமென்று அந்தப் பகுதிகளைத் தேடி வருகிறார்கள். ஆகவே, சிட்லபாக்கம் பேரூராட்சியை, செம்பாக்கத்தைப்போல உடனடியாக நகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பெருங்களத்தூர் பேரூராட்சியும் மிகப் பெரிய பேரூராட்சி. வருமானத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. தொழிற்சாலைகள் நிறைந்த வளர்ந்து வருகிற பகுதி. ஆகவே சிட்லபாக்கம், பெருங்களத்தூர் இரண்டையும் நகராட்சிகளாகத் தரமுயர்த்த வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அரசு அதிகாரிகளுக்கும் தெரியும். தாம்பரத்தைக்கூட மாநகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று பொது மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக தாம்பரம் நகராட்சியையும் மாநகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, அதன்மூலம் கிட்டத்தட்ட 5 கேள்விகளுக்கு பதில் கேட்டிருக்கிறார். ஒரு பேரூராட்சி நகராட்சியாகத் தரமுயர்த்தப்பட வேண்டுமென்றால், அரசாணை எண் 237, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2–12–2008–ன்படி, அப்பேரூராட்சியின் ஆண்டு வருமானம் 4 கோடி ரூபாய் இருத்தல் வேண்டும்; தமிழ்நாடு அரசின் அவசரச் சட்டம் 7/2004–ன்படி, பேரூராட்சியின் மக்கள் தொகை 30,000–க்கும் அதிகமாக இருத்தல் வேண்டும். அப்படி அதிகமாக இருந்தால், அங்கிருக்கக்கூடிய மன்றத்தில் விவாதிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகத் துறைக்குக் கடிதம் அனுப்பப்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குலசேகரம் பேரூராட்சியில் உள்ள திடக் கழிவுகளைக் கொட்டுவதற்கு இடமில்லாமல், அங்கே அமைந்திருக்கக்கூடிய தினசரி சந்தையில் அவை கொட்டப்பட்டு, மிகுந்த அளவு சுகாதாரப் பிரச்சினை நீண்டகாலமாக அங்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கொரு மாற்று இடத்தைத் தேர்வு செய்துள்ளோம் என்று இரண்டு ஆண்டுகளாக மாவட்ட நிருவாகம் சொல்லி வருகிறது. ஆனால், இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால், அந்தப் பகுதி மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். எனவே, உடனடியாக குலசேகரம் பேரூராட்சிக்கு திடக் கழிவு மேலாண்மைக்கான இடத்தை ஒதுக்கீடு செய்து, அதற்குத் தேவையான machineries–ஐ அரசு வழங்குமா என்பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 25]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, அந்தப் பேரூராட்சியில் திடக் கழிவு மேலாண்மைக்கு, குப்பைகளையெல்லாம் கொட்டுவதற்கு, இடம் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று கேட்டார்கள். அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை மற்றும் நம்முடைய துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி, அங்கே இடத்தை ஆய்வு செய்து, அது முக்கியமான, அவசியமான பிரச்சினை என்பதால், கண்டிப்பாக நிறைவேற்றப்படும். இப்போது ஒவ்வொரு பகுதியிலும் பார்த்தோமென்றால், இடம் தேர்வு செய்வதில்தான் பிரச்சினையாக இருக்கிறது. அதாவது, ஓர் இடத்திற்குச் சென்று குப்பை கொட்டும்போது, அங்கே பக்கத்தில் இருப்பவர்கள் அங்கே கொட்டக் கூடாது என்று சொல்லி நீதிமன்றத்திற்குச் செல்கின்றனர். அதற்குத்தான், இப்போது வேலூர் போன்ற மாநகராட்சிகளிலெல்லாம், ஆங்காங்கே, அந்த வார்டிலேயே பிரித்து, புதிய* method–*ல் தீர்வு செய்து, வெற்றிகரமாக அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரமுயர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றதா? குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பல பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படுவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. அது உண்மையா; அப்படியென்றால், அந்தப் பேரூராட்சிகள் எப்போது நகராட்சிகளாக தரமுயர்த்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி நகராட்சியாகவும், ஊராட்சி பேரூராட்சியாகவும், இப்படி உள்ளாட்சி அமைப்புகளைத் தரமுயர்த்தும் போது பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்,*

ஊரக மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் சங்கங்கள் ஆகியோருடன் முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில் பெறும் கருத்துகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித் தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளோர்களின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரையுடன் கருத்துரு தயாரிக்கப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது நகராட்சி நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட வேண்டும். தேவைப்பட்டால், பேரூராட்சிகளின் இயக்குநர் மாவட்ட அளவில் மூன்றாவது கூட்டத்தை நடத்தி, கருத்துருவின் மீதான விண்ணப்பம் மற்றும் ஆட்சேபணையைப் பெறலாம்; மூன்றாவது கூட்டத்தை நடத்தலாம். இப்படி எல்லாமுமே விதிமுறைகளுக்குட்பட்டு அங்கே அமைக்கப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும். அதைப்போல, என்னுடைய துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் இதுகுறித்து அறிவிப்பு இருக்கிறது. சில ஊராட்சிகள் பேரூராட்சிகளாகவும், பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், அதாவது அந்த விதிமுறைக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளைத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

203—

காகிதத் தொழிற்சாலை

***25131—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—